




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 350 | 4 Pages | 16.7.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 350 | 4 பக்கங்கள் | 16.7.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**

**அதனின் அதனின் இலன்**

**விளக்கம்:**

ஒருவன் எந்தப் பொருளிலிருந்து, எந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ,அந்தந்தப்பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் முதல்வர் தொடங்கி வைத்தார்

கடலூர் ஜூலை 16

அரசு துறை சேவை, திட்டங்களை, வீடுகளுக்கே சென்று வழங்கும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (செவ்வாய்கிழமை) கடலூர்மாவட்டம்சிதம்பரம்பேருந்து நிலையம் அருகில் உள்ள வாண்டையார் திருமண மண்டபத்தில் தொடங்கி வைத்தார்.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கிவைத்த நிலையில், தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் 196 இடங்களில் முகாம் நடைபெற உள்ளது. தொடர்ந்து, நவம்பர் 30ந் தேதி வரை இந்த முகாம் நடைபெற இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முகாம் நடைபெறும் தேதி மற்றும் இடம் குறித்த விவரங்களை https://cmhelpline.tnega.org/ என்ற இணையதளம் மூலம் பொதுமக்கள் அறிந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த புதிய திட்டத்தின் மூலம் ஊரக பகுதிகளில் 15 துறைகளின் 46 சேவைகளும், நகர்ப்புற பகுதியில் 13 துறைகளின் 43 சேவைகளும் வழங்கப்பட உள்ளன. மாநிலம் முழுவதும் இந்த திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 3 ஆயிரத்து 768 முகாம்களும், ஊரக பகுதிகளில் 6 ஆயிரத்து 232 முகாம்களும் என மொத்தம் 10 ஆயிரம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவதற்கும்

இந்த முகாமில் விண்ணப்பங்கள் வழங்கப்பட உள்ளதாகவும், தகுதியுள்ள மற்றும் விடுபட்ட பெண்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இந்த முகாம்களில் வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## ஆசிரியர் பாலியல் தொல்லை: தீக்குளித்த மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

புவனேஸ்வர், ஜூலை 16

ஒடிசாமாநிலம்,பாலசோர்பகுதியில்உள்ளபகிர்மோகன்கல்லூரியில் படித்த மாணவிக்கு, துறையின் தலைவர் சமீர் சாஹூ பாலி தொல்லை கொடுத்ததாக புகார் எழுந்தது. இருப்பினும், உரிய விசாரணை நடத்தப்படாத நிலையில், அந்த மாணவி, தனக்குத் தானே உடலில் தீ வைத்துக் கொண்டது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

90 சதவீத தீக்காயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மாணவி, சிகிச்சைபலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து மாணவியின் மரணத்திற்கு இரங்கல் தெரிவித்துள்ள ஒடிசா முதல்வர் மோகன் சரன் மாஜி, பாலியல் புகாரில் தொடர்புடைய அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று உறுதி அளித்தார். இதற்கிடையே, மாணவியின் தீக்குளிப்புக்குப் பிறகு சஸ்பெண்ட் செய்யப்பட்ட கல்லூரி முதல்வர் திலீப் கோஷே. கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## தனியார் நிறுவன பெண் ஊழியர் தற்கொலை: மகள் இல்லாமல் தன்னாலும் வாழ முடியாது என தாய் எடுத்த விபரீத முடிவு



பெங்களூரு, ஜூலை 16

கர்நாடக மாநிலம் பெங்களூரு ஒயிட்பீல்டு அருகே நாகதொண்டனஹள்ளியில் வசித்து வந்தவர் ரஜிதா ரெட்டி (வயது 58). இவரது மகள் ஸ்ரீஜா ரெட்டி (24). இவர், தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். ரஜிதாவின் கணவர் கம்ப்யூட்டர் என்ஜினீயர் ஆவார்.

நேற்று காலையில் அவர் வேலைக்கு சென்று விட்டார். தாயும், மகளும் வீட்டில் இருந்தனர். அப்போது வீட்டின் படுக்கை அறையில் உள்ள மின்விசிறியில் தூக்குப்போட்டு ஸ்ரீஜா தற்கொலை செய்துகொண்டார்.

சமையல் செய்துவிட்டு படுக்கை அறைக்கு சென்ற ரஜிதா தனது மகள் தூக்கில் தொங்குவதை பார்த்து அதிர்ச்சி அடைந்து கதறி அழுதார். மேலும் தனது கணவரை தொடர்பு கொண்டு மகள் தற்கொலை செய்து விட்டதாகவும், மகள் இல்லாமல் என்னாலும் வாழ முடியாது என்றும் ரஜிதா கூறியுள்ளார். உடனே அவரது கணவர் வீட்டுக்கு வந்துள்ளார்.

அப்போது ரஜிதா தூக்கில் பிணமாக தொங்கினார். தரையில் மகள் ஸ்ரீஜாவின் உடல் இருந்தது. இதை பார்த்து ரஜிதாவின் கணவர் அதிர்ச்சி அடைந்து கதறி அழுதார். தகவல் அறிந்ததும் ஒயிட்பீல்டு போலீசார் விரைந்து வந்து தாய், மகளின் உடல்களை கைப்பற்றி விசாரித்தனர்.

அப்போது மின்விசிறியில் கயிற்றால் ஸ்ரீஜா முதலில் தூக்குப்போட்டு தற்கொலை செய்ததால், ரஜிதா மனம் உடைந்து போனதுடன், கணவருக்கும் தகவல் தெரிவித்துள்ளார். பின்னர் மகளின் உடலை மின்விசிறியில் இருந்து ரஜிதா கீழே இறக்கியுள்ளார்.

கணவர் வருவதற்குள் ரஜிதாவும் அதே மின்விசிறியில் தொங்கிய கயிற்றில் தூக்குப்போட்டு தற்கொலை செய்ததும் போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. ஸ்ரீஜாவின்தற்கொலைக்குகாரணம் என்ன? என்பது தெரியவில்லை.

இதுதொடர்பாகபோலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணைநடத்தி வருகின்றனர்.

## தனியார் நிறுவன பெண் ஊழியர் தற்கொலை: மகள் இல்லாமல் தன்னாலும் வாழ முடியாது என தாய் எடுத்த விபரீத முடிவு

புதுடெல்லி, ஜூலை 16

ஏர் இந்தியா விமான விபத்து தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் முதல் கட்ட அறிக்கை வெளியகியுள்ளது. இந்த அறிக்கை பல்வேறு கேள்விகளை எழுப்பி இருப்பதாக ஏர் இந்தியா கூறியுள்ளது. இது தொடர்பாக ஏர்இந்தியாவிமானஊழியர்களுக்கு அதன்தலைமை செயல்அதிகாரி கேம்பல் வில்சன் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

உலகமும், நாமும் எதிர்பார்த்தது போலவே முதற்கட்ட விசாரணை அறிக்கை கூடுதல் தகவல்களை பெற்று வருவதாக குறிப்பிட்டு உள்ளது. எதிர்பார்த்தது போலவே இந்த அறிக்கை மூலம் அதிக தெளிவும், ஏராளமான கேள்விகளும் எழும்பி உள்ளன. விபத்துக்குள்ளான விமானம் மற்றும் அதன் என்ஜின்களில் எந்திர கோளாறோ, பராமரிப்பு பிரச்சினைகளோ இல்லை என்பது உறுதியாகி இருக்கிறது. அத்துடன் கட்டாய பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு இருக்கிறது.

எரிபொருளின் தரத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை, புறப்படும் பணிகளிலும் எந்த அசாதாரணமும் இல்லை. விமானிகள் தங்கள் கட்டாய பயணத்துக்கு முந்தைய போதை பரிசோதனையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். மேலும் அவர்களின் உடல் நிலை குறித்து எந்த அதிருப்தியும் இல்லை. விபத்து தொடர்பான விரிவான மற்றும் முழுமையான விசாரணைக்காக விசாரணைக்குழுவினருக்கு நாங்கள் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவோம். கடந்த30நாட்களுக்கும்மேலாகஏராளமானகருத்தாக்கங்கள்,குற்றச்சாட்டுகள், புரளிகள் மற்றும் பரபரப்பான தலைப்பு செய்திகள் வெளியாகி இருந்தன. அவை அனைத்தும் ஆதாரமில்லாமல் போய் விட்டது.


அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வருவது புத்திசாலித்தனம் அல்ல. ஒரு இறுதி அறிக்கை அல்லது காரணம் கண்டறியப்படும் வரை இத்தகைய யூகங்களும், அதிக பரபரப்பான தலைப்பு செய்திகளும் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.ஏர் இந்தியா தனது பணியில் கவனம் செலுத்தி, நேர்மை, சிறப்பு, வாடிக்கையாளர் கவனம், புதுமை மற்றும் குழுப்பணி ஆகிய மதிப்புகளுக்கு உண்மையாக இருக்கும்" என்றார்.

ஆமதாபாத்தில் கடந்த மாதம் நடந்த விமான விபத்து தொடர்பாக இந்திய விமான விபத்து புலனாய்வு அமைப்பு நடத்திய முதற்கட்ட விசாரணை அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. இதில் விமானம் மேலே எழும்பிய ஒரு சில வினாடிகளுக்குள்ளே அவற்றின் என்ஜின்களுக்கு எரிபொருள் வினியோகம் தடைபட்டதால் அவை செயலிழந்து விமானம் கீழே விழுந்து நொறுங்கியதாககூறப்பட்டு இருந்தது.ஆனால்இந்தவிசாரணைஅறிக்கையை விமானிகள் அமைப்பு நிராகரித்தது. அதைப்போல இந்த அறிக்கை அடிப்படையில் இறுதி முடிவுக்கு வர வேண்டாம் என மத்திய அரசும் கூறியிருந்தது.

## மக்கள் ஜனநாயகம் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

கல்வியால்_தான் ஒரு_சமூகத்தை_மேம்படுத்த_முடியும் உயர்த்த_முடியும், உன்னதமாக்க_முடியும் என்பதை, தன் வாழ்நாளில் நடைமுறைப்படுத்தி காட்டி தமிழ் சமூகத்தை அறிவு சமூகமாகிய பெருந்தலைவர் கர்மவீரர் ஐயா காமராசர் அவர்களின் 123 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மக்கள் ஜனநாயகம் முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் அகிம்சை மக்களின் தலைவர் (இப்ராஹிம் பதுஷா) அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க, இன்றைய தினம் கழகத்தின் திருப்பூர்_மாநகர் மாவட்ட நிர்வாகிகள் கர்மவீரரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்

இந்த நிகழ்வில் மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் மாநகர் மாவட்ட செயலாளர் (அபுதாஹீர்.mjmk) ஆகியோர் என்னுடைய தலைமையில் கழகத்தின் திருப்பூர் மாநகர் மாவட்ட துணை அமைப்பாளர் உயர்திரு.(பிரகாஷ்) மாநகர், மாவட்ட துணை அமைப்பு செயலாளர் உயர்திரு. (சலீம்) திருப்பூர் மாநகர் மாவட்டத்தின் வடக்கு மாவட்ட செயலாளர் உயர்திரு சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்



## பொய்களுடன் ஸ்டாலின் என பெயர் வைத்திருக்கலாம்: ஜெயக்குமார் விமர்சனம்

சென்னை, ஜூலை 16

சென்னையில்காமராஜர்சிலைக்கு மாலை அணிவித்த பிறகு அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்' என்பதற்கு பதிலாக பொய்களுடன் ஸ்டாலின் என பெயர் வைத்திருக்கலாம். தேர்தல் வந்தால் தான் முதல்அமைச்சருக்கு மக்கள் கண்ணுக்கு தெரிகின்றனர். கொஞ்சம் கூட ஸ்டாலினுக்கு வெட்கம் இல்லையா..? எதிர்கட்சியாக இருந்தபோது பெட்டி வைத்து வாங்கிய மனுக்கள் என்னவானது..? சாவியை அவரே வைத்திருந்தார். முதல்அமைச்சரான பின் மனுக்களை நானே படித்து நடவடிக்கை எடுப்பேன் என்றார்.




நான் முதல்அமைச்சரான பின் பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் நேராக தலைமை செயலகத்தில் எனது அறைக்கு வரலாம் என்றார். 4 ஆண்டில் தலைமைச் செயலகத்தில் பொதுமக்களை ஒருமுறையேனும் ஸ்டாலின் சந்தித்தது உண்டா?. "பொய்களுடன் ஸ்டாலின்" என்பதே திட்டத்தின் உண்மையான பெயராக இருக்க வேண்டும் என மக்கள் கூறுகின்றனர். தமிழகத்தில் ஸ்டாலின் ஆட்சி நடைபெறவில்லை. போலீஸ் ஆட்சியும், அதிகாரிகள் ஆட்சியுமே நடைபெறுகிறது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இருக்கும் போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை செய்தித் தொடர்பாளராக நியமிப்பது ஏன்?. அரசின் திட்டங்களை அமைச்சர்கள் மக்களுக்கு கூறாமல் அதிகாரிகள் கூறினால் அதன் பெயர் எமர்ஜென்சி நிலை. இப்போது மக்களாட்சி இல்லை, அதிகாரிகள் ஆட்சியே நடக்கிறது என்பதற்கு இந்த நியமனமே உதாரணமாகும். தமிழகத்தில் மக்களாட்சி நடைபெறவில்லை, அதிகாரிகள் ஆட்சிதான் நடைபெறுகிறது.

கேரளாவை போல் 'ப' வடிவில் மாணவர்களை அமரவைப்பதால் கல்வித்தரம் உயர்ந்துவிடுமா? 3,600 பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் இல்லை. கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.அன்பில்மகேஷ்திறமையற்றவர், அறிவு இருப்பவர்களை பள்ளிக் கல்வித்துறைக்கு அமைச்சர்களாக நியமிக்கலாம். அன்பில் மகேசை திரைத்துறை அமைச்சராக போடலாம். இவ்வாறு அவர் கூறினார்,

## சுண்டக்காம்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

சுண்டக்காம்பாளையம் அரசுநடுநிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் ஜூலை 15 சுண்டக்காம்பாளையம் அரசுநடுநிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி நாள் விழாவாக கொண்டாடப்பட்டது விழாவுக்கு பள்ளி தலைமை ஆசிரியர் காளியப்பன் தலைமையேற்றார் மாணவ மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி கட்டுரை போட்டி ஓவிய போட்டி என பல்வேறு போட்டிகளில் நடத்தப்பட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது இறுதியில் ஆசிரியர் ரங்கநாதன் நன்றி கூறினார் இனிப்புகள் வழங்க விழா இனிதே நிறைற்றது





உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா தொடர்புக்கு:9443699066

WHATSAPP CHENEL

DHINAKANI.COM

# காமராஜர் பிறந்த நாள் விழாகாங்கிரஸ் நிர்வாகிகள் அனுசரிப்பு




சென்னை மாநகராட்சி 33வது வார்டு லட்சுமிபுரத்தில், மாதவரம் தெற்கு பகுதி காங்கிரஸ் கமிட்டி சார்பில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர்காமராஜரின், 123வது பிறந்த நாளை யொட்டி மாவட்ட துணைத்தலைவர் கிரி முன்னிலையில் காங்கிரஸ் கமிட்டி மாதவரம் தெற்கு பகுதி தலைவர் சங்கர் தலைமை தாங்கி, காமராஜரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இதில் நிர்வாகி கண்ணன், காலசாமி, அணில்குமார், நடராஜ், கமலகரராவ், சுரேஷ் உள்ளிட்டகாங்கிரஸ்பொறுப்பாளர்கள்திரளாக கலந்து கொண்டனர்.

# பழனியில் கல்விக்கண் திறந்த காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு த.வெ.க. நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்




பழனி, ஜூலை 16

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கைத் தலைவர்களில் ஒருவரான பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழகத் தலைவர் உத்தரவின்படி, கழகப் பொதுச் செயலாளர் புஸ்லி ஆனந்த் வலியுறுத்தலின்படி. திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா ஆணைக்கிணங்க. பழனி ஆர் எப் ரோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலை அருகே கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்வில். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் நகரத் தலைவர் மிதுன். மற்றும் மாவட்ட நிர்வாகிகள் நகரம் ஒன்றியம் சார்பணி நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்

# ஒத்தகுதிரையில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹைடெக் பொறியியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவ மாணவிகளின் தொடக்க விழா




ஈரோடு மாவட்டம், கோபி அடுத்த ஒத்தகுதிரையில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஹைடெக் பொறியியல் கல்லூரி(தன்னாட்சி), யில் உள்ள ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற 18 ஆவது ஆண்டில் முதலாமாண்டு பி.இ /பி.டெக் பயிலும் மாணவ மாணவிகளின் தொடக்க விழா நடைபெற்றது. விழாவில் கல்லூரி செயலாளர் கே. சி. கருப்பணன் கலந்து கொண்டு மாணவர்கள் வாழ்வில் வெற்றி பெற என்னென்ன யுக்திகளை கையாள வேண்டும் என்பது பற்றியும், செல்போன்களை பயனுள்ள தகவல்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் எனவும், மாணவர்கள் செயல்முறை பயிற்சியில் தனித்துவம் பெற்றிருந்தால் அவர்களுக்கு அனைத்து விதத்திலும் நிர்வாகம் உறுதுணையாக இருக்கும் எனவும் தெரிவித்து கலந்து கொண்ட அனைத்து பெற்றோர்களுக்கும்தனது மொபைல் நம்பரை வழங்கி தங்களுக்கு எதாவது குறை இருந்தால் அழைக்கலாம் என கூறினார். மேலும் விழாவில் கல்லூரியின் தலைவர் பி.வெங்கடாச்சலம், இணைச் செயலாளர்

ஜி.பி.கெட்டிமுத்து

தலைமை நிர்வாக அதிகாரி ஜி.கௌதம்,முதல்வர்

பி.தங்கவேல்,துணை முதல்வர் எஸ்.பிரகாசம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: அமைச்சர் தொடங்கி வைத்தார்



திண்டுக்கல், ஜூலை 16

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகராட்சியில் இருந்து காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் தரகு மண்டி குமாஸ்தாக்கள் சங்கம் மண்டபத்தில் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், தலைமையில் நடைபெற்ற மனுக்கள் பெறும் முகாமில் கலந்துகொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து, ஆத்துர் சட்டமன்ற தொகுதி, அக்கரைப்பட்டியில் நடைபெற்ற மனுக்கள் பெறும் முகாமில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர், அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும், பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிந்து தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்துள்ளார்கள்.

கோரிக்கை மனுக்கள் அளிப்பதற்காக பொது மக்கள் யாரையும் தேடிச் சென்று அலைய வேண்டியது இல்லை. உங்கள் கிராமங்களில் நடத்தப்படும் முகாம்களில் மனுக்கள் அளிக்க வேண்டும். இத்திட்ட முகாம்களில் பெறப்படும் மனுக்கள் மீது 45 நாட்களில் தீர்வு காணப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு மட்டுமின்றி சொல்லாத பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

கூட்டுறவு வங்கிகளில் தங்க நகைக்கடன் 5 பவுன் வரை தள்ளுபடி செய்யப்பட்டன. மகளிர் சுயஉதவிக்குழு கடன் சுமார் 2,700 கோடி தள்ளுபடி செய்யப்பட்டன. விவசாயிகள் கடன் சுமார் ரூ.12,000 கோடி தள்ளுபடி செய்யப்பட்டன. பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அரசு நகரப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள விடியல் பயணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்மூலம் வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகளவில் பயனடைந்து வருகின்றனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தகுதியான நபர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 4 இலட்சம் பெண்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் இன்னும் 10 ஆண்டுகளில் குடிசைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கும் வகையில் ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் வழங்கும் வகையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் 8.00 இலட்சம் வீடுகள் கட்டி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒரு இலட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டதில், சுமார் 80,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்த ஆண்டும் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர பழுதடைந்த வீடுகளை சீரமைக்கும் திட்டத்தில் ஏராளமான வீடுகளில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தற்போது அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதோடு மட்டுமின்றி மாணவர்களும் பயன்பெறும் வகையில் அவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

அதேபோல், 100 நாள் வேலை திட்டத்தில் ஒன்றிய அரசிடமிருந்து நிதி கிடைக்காதபோதிலும், மாநில அரசின் நிதியிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி, அவர்கள் பாதுகாப்பாக வசிப்பதற்காக வீடுகள் கட்டி வழங்கப்படுகிறது. குடிநீர், சாலை வசதி, பேருந்து வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இது மக்களுக்கான அரசு, ஏழைகளுக்கான அரசு. பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட இந்த அரசு என்றென்றும் தயாராக உள்ளது, என மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

# தொண்டர் படை பயிற்சி முகாம்: இளைஞர்களுக்கு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய முயற்சி



அரியலூர், ஜூலை:16

உடையார்பாளையத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அமைப்பான அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில், அரியலூர் மாவட்டம் உடையார்பாளையில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் இளைஞர்களுக்கான "தொண்டர் படை பயிற்சி முகாம்" வெற்றிகரமாக நடைபெற்றது. இம்முகாம் தோழர் காத்தவராயன் தலைமையில் நடைபெற்றது.

முகாமிற்கு தலைமை வகித்த மாநில பொருளாளர் தோழர் காரல்மார்க்ஸ், இளைஞர்களுக்கான சமூகப் பொறுப்பு மற்றும் அரசியல் விழிப்புணர்வு குறித்து முக்கிய உரை நிகழ்த்தினார். முகாமினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்தோழர் நடராஜன் துவக்கி வைத்தார். முக்கிய பயிற்சியாளராக செயல்பட்ட தோழர் கார்த்திக், இளைஞர்களுக்கு ஒழுக்கம், ஒத்துழைப்பு, திட்டமிடல், தன்னலமற்ற செயல் மற்றும் சமூக மாற்றத்திற்கான நவீன போராட்டங்கள் குறித்தும் விரிவாக பயிற்சி அளித்தார். இம்முகாம், இளைஞர்களிடையே தெளிவான புரிதலையும் செயல்பாட்டு உறுதியையும் உருவாக்கியது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் ராமநாதன் தா. பழூர் ஒன்றிய செயலாளர் தோழர் முருகேஸ்வரி சமூக செயற்பாட்டாளர்கள் லோகநாதன், ராதாகிருஷ்ணன் பயிற்சி முகாமில் பங்கேற்ற முக்கிய தோழர்கள்: சுரேஷ்குமார், அஜித் குமார், தாமரைசெல்வன், ஆகாஷ், ஆதித்யவர்ஷன், ஜனார்த்தனன், விஜய், வல்லவன், ராஜேஸ்வரி, பாலமுருகன், தமிழ் மொழி வேல்முருகன், ராதாகிருஷ்ணன், ஹானஸ்ட்ராஜ், சேரஅரசு, பாண்டியன், சந்தோஷ்குமார், சிபிராஜ், ஆதி, ஆனந்தகுமார், ராமன், மணிகண்டன், பரணிதரன், செந்தில்குமார் ஆகியோர் பயிற்சியில் பங்கேற்று பயனடைந்தனர்.

இவ்வாறு நடைபெற்ற இளைஞர் பயிற்சி முகாம், சமூக நலனுக்கான ஒரு புதிய விழிப்புணர்வை உருவாக்கியதோடு, எதிர்கால அரசியல் பொறுப்பு மிக்க தலைமுறையை உருவாக்கும் தக்கவிதமான அடித்தளத்தை அமைத்ததாக நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் ஒருமித்த கருத்து தெரிவித்தனர்.

# பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் 3 இடங்களை பெற்ற சாதனை மாணவ மாணவிகளுக்கு விருது



ஈரோடு மாவட்டம் கோபி அடுத்த ஒத்தகுதிரை அருகே பொம்மநாயக்கன் பாளையம் ஊராட்சியில் டாக்டர் எம்ஜிஆர் கல்வி மேம்பாட்டு குழு சார்பில் தொடர்ந்து 10வது ஆண்டாக பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற சாதனை மாணவ மாணவிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் விழா ஏ வி எம் கலை அரங்கத்தில் நடைபெற்றது.இதில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ மாணவிகளுக்கு ரூ. 3000,ரூ.2000,ரூ. 1000 ரொக்க தொகையும், பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது. டாக்டர் எம்ஜிஆர் கல்வி மேம்பாட்டு குழு தலைவர் பி.யு. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற விழாவில் மேம்பாட்டு குழுவின் இயக்குனர் வெங்கிடுசாமி வரவேற்புரை வழங்கினார்.மேலும் விழாவில் முன்னாள் ஊராட்சி மன்றதலைவர்சண்முகத்தரசு, கோவை தொழிலதிபர் ஏவிஎம். வி.செந்தில் குமார் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். உயர்கல்விகள் தலைப்பில் கள்ளிப் பட்டி அரசு மேல்நிலை பள்ளியின் முதுகலை ஆசிரியர் ஏ.ஏ.அன்பரசு சிறப்புரையாற்றினார். விழாவின் முடிவில் பொருளாளர் வீரக்குமார் நன்றியுரை கூறினார்.

# ஏரியூரில் கோயில் உண்டியலை உடைத்தாக சிறுவர் உள்ளிட்ட இருவர் கைது



பென்னாகரம், ஜூலை 16

ஏரியூரில் கோயில் உண்டியலை உடைத்து திருட முயற்சித்த சிறுவன் உள்ளிட்ட இருவரை போலீஸார் கைது திங்கள் கிழமை செய்தனர்.

ஏரியூர் அருகே மணியக்காரன் கொட்டாய் பகுதியில் முனியப்பன் கோயில் உள்ளது. ஞாயிற்றுக்கிழமை மாலை கோயிலில் உள்ள உண்டியலை உடைத்து இருவர் திருடன் முயற்சித்துள்ளனர். அப்பகுதியில் ஆடு மேய்த்து கொண்டு இருந்தவர் சத்தம் கேட்டு கோயில் பகுதிக்கு வந்தபோது, அங்கிருந்து இருவரும் தப்பி ஓடினர். இதுகுறித்து கோயில் நிர்வாகிகள் ஏரியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.புகாரின் பேரில் கண்காணிப்பு காமிரா காட்சி அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட போலீசார் கோயில் உண்டியலை உடைத்த இருவர் ஏரியூர் கீழ் காலனி பகுதியைச் சேர்ந்த மதிவாணன் (28), அதே பகுதியைச் சேர்ந்த மற்றொரு சிறுவன் என்பது தெரியவந்தது.

பின்னர் இருவரையும் ஏரியூர் போலீஸார் கைது செய்து வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

# பாரம்பரிய விதைகள் பரிமாற்ற விழாவிற்கான அழைப்பிதழை தலைவர் ஜி.கே. விவசாயமணியிடம் வழங்கப்பட்டது



பாரம்பரிய விதைகள் பரிமாற்ற விழாவிற்கான அழைப்பிதழை தலைவர் ஜி.கே. விவசாய மணியிடம் வழங்கப்பட்டது

அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நிறுவன தலைவர் ஜி கே விவசாய மணி (எ) ஜி. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து மாநில இயற்கை வேளாண்மை பிரிவு தலைவர் ரெ. முத்துசாமி அவர்களோடு விராலிமலை ஒன்றிய நிர்வாகிகள்கலந்துகொண்டு தங்களுடைய கருத்துக்களை கூறினார்கள் மேலும் வருகின்ற 217 2025 ஆடி மாதம் 5 ஆம் நாள் நடைபெற உள்ள பாரம்பரிய விதைகள் பரிமாற்ற விழாவுக்கான அழைப்பிதழை சங்க நிறுவன தலைவர் ஜி. கே. விவசாய மணி என்கின்ற ஜி. சுப்பிரமணியம் அவர்களிடம் வழங்கினர் சிறப்பு விருந்தினர் முகவை கண்ணன் அவர்கள் பங்கேற்று சிறப்பித்தார்

முடிவில் பிரபஞ்சம் சௌந்தர்ராஜன் அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துரையும் ஆசியும் வழங்கினார்

# கர்மவீரர் காமராஜர் பிறந்த நாள் விழா




மேலூர் ஜூலை.16

முன்னாள் முதல்வர் கர்ம வீரர் காமராஜரின் 123வது பிறந்த நாளை முன்னிட்டு, மதுரை மாவட்டம் மேலூர் பேருந்து நிலையம் முன்பு வைக்கபட்ட திரு உருவ படத்திற்க்கு, மேலூர் நாடார் உறவின்முறை மற்றும் இளைஞர் அணி சார்பில், மருத்துவர் எம்.பாஸ்கரன் தலைமையில், அதன் நிர்வாகிகள் உறுப்பினர்கள் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனுப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், மேலூர் நாடார் உறவின்முறை தலைவர் ஏ.கடற்கரை நாடார், செயலாளர் கே.பொன்ராஜ், பொருளாளர் சி.கே. தர்மராஜ், நாட்டமை எஸ்.முத்துக்குமார், மேலூர் இளைஞரணி தலைவர் கே.விக்னேஷ் ராஜ். மதுரை மகாஜன சங்க மண்டல செயலாளர் பி.சேகர் பாண்டியன், பொருளாளர் ஆர்.ராஜசேகர், நாடார் மகாஜன சங்க இளைஞர் அணி தலைவர் எஸ்.தமிழ்செல்வன், செயலாளர் எஸ்.சங்கித்ராஜ், எஸ்விஎன் கல்லூரி செயர்குழு உறுப்பினர் சீனிவாசன். மற்றும் மதுரை மாவட்ட நாடார் மகாஜன சங்க நிர்வாகிகள் மேலூர் நாடார் உறவின் முறை சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கிடைக்கும் சேவைகள்



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பம்மு தியோர் / விதவை / கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை ஆதார் திருத்தம்– புதிய பதிவுகள்ரே ஷன் கார்டுகள் திருத்தம் – புதிய பதிவுகள்பி றப்பு / இறப்புச் சான்றிதழ்இ ருப்பிட சான்றிதழ்கள் • சாதிச் சான்றிதழ்அ னைத்து நலவாரியங்களில் உறுப்பினர் பதிவு கலைஞர் கைவினைத் திட்டம்அ ண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம்பா தாள சாக்கடை இணைப்பு குடிநீர் இணைப்புகள்சொ த்து வரி பெயர் மாற்றம்சா லையோர வியாபாரிகள் அடையாள அட்டை முழுமையான உடற்பரிசோதனை உள்ளிட்ட அரசின் 46 சேவைகள் வழங்கப்படுகிறது. தாராபுரம் டி எஸ் கார்னர் பகுதியில் உள்ள பாசறை மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி 6, 12,13 ஆகிய வார்டுகளில் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது இந்நிகழ்வை மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும் ஆய்வு செய்தனர். உடன் முருகானந்தம், நகர மன்ற உறுப்பினர் அன்பழகன், நகர மன்ற உறுப்பினர் ராசாத்தி பாண்டியன் அவர்களும் மற்றும் கட்சித் தொண்டர்களும் பலர் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மானம்பாடி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



தஞ்சாவூர், ஜூலை 16

தமிழ்நாடு முதலமைச்சர் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் தமிழ் நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மானம்பாடி ஊராட்சியில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் கலந்து கொண்ட மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

இம்முகாமில் மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், துணை மேயர் சுப.தமிழழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், கும்பகோணம் சார் கலெக்டர் ஹிருத்யா எஸ்.விஜயன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இம்முகாமில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி, மக்களின் குறைகளை தீர்க்க உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தில் நகர்புறங்களில் 45 முகாம்கள் கிராம புறங்களில் 75 முகாம்கள் ஆக மொத்தம் 120 முகாம்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜூலை 15 முதல் ஆகஸ்ட் 14 வரை நடைபெறவுள்ளது. நகர்ப்புறங்களில் 13 துறைகள் மூலம் 43 சேவைகளும் கிராமப்புற ங்களில் 15 துறைகள் மூலம் 46 சேவைகளுக்கான மனுக்கள் பெற்று 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். எனவே, பொதுமக்கள் அனைவரும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்புத் திட்டம் தனித்துணை ஆட்சியர் பெ .மணிமாறன், திருவிடைமருதூர் வட்டாட்சியர் ஆர். சாந்தமீனா, கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரா. இராசன், எஸ்.சாமிநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன்ஸ்ரீ பாரமுனீஸ்வரர் கோயிலில் தீமிதி திருவிழா





மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரி குப்பம் பேரூராட்சி காமராஜர் நகரில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் பாரமுனீஸ்வரர் கோயிலில் 43 ம் ஆண்டு தீமிதி திருவிழா கோயில் நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரத்துடன் தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பூங்கரகம் எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல், அலகுப் பானை எடுத்தல் மற்றும் திருவிளக்கு பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.இதனைத்தொடர்ந்து விரதம் இருந்த சுமார் 100க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.இத்திருவிழாவிற்கு கோயில் பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றி அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். இவ்விழாவை முன்னிட்டு கோயில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

# நாமக்கல் மாவட்டத்தில் உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்



நாமக்கல், ஜூலை 16

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு மாபெரும் விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு ரதத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஒவ்வொரு ஆண்டும் குடும்ப நலத்துறை சார்பாக ஜூலை 11 ம் நாள் உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த வருடம் "ஆரோக்கியமான போதிய இடைவெளியுடன் பிள்ளைப்பேறு, திட்டமிட்ட பெற்றோர்கான அடையாளம்" என்ற கருப்பொருளை மையமாக வைத்து உலக மக்கள் தொகை தினம் அனுசரிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில், உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, கல்லூரி மாணவியர்கள் பங்கேற்ற மாபெரும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இப்பேரணியானது நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் தொடங்கி பாரத ஸ்டேட் வங்கி வழியாக மோகனூர் சாலை வழியாக பேருந்து நிலையம் வரை சென்று மீண்டும் கல்லூரியை வந்தடைந்தது. இப்பேரணியில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் செவிலியர்கள் பிறப்பு விகிதத்தை குறைக்க பெண் குழந்தைகளை படிக்க வைப்போம், பெண்ணுக்கு 21 வயதுக்கு பின் திருமண ஏற்பாடு செய்வோம், சத்துணவை இனம் கண்டு உண்போம், உடலை உள்ளத்தை சுற்றுப்புறத்தை தூய்மைப்படுத்துவோம், பிறப்பை கட்டுப்படுத்தும் செய்தியும் சாதனமும் எல்லா அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் துணை சுகாதார நிலையத்திலும் அரசு ஆரம் சுகாதார நிலையத்திலும் பெறுவீர், பயனடைவீர், பெண் சிசு கொலையையும் தடுத்து பெண் குழந்தையைப் பேணி காப்போம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பாதாதைகளை ஏந்தியவாறு மாணவியர்கள் பேரணியாக சென்றனர்.

மேலும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் உள்ள கலையரங்கத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள், ஆணும், பெண்ணும் சமம், பெண் கல்வியின் முக்கியத்துவம், இளம் வளது திருமணத்தை தவிர்த்தல், இளம் வயது கர்ப்பத்தை தவிர்த்தல், பெண் பாலின விகிதத்தை அதிகரிப்பது மற்றும் குடும்ப கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

தொடர்ந்து, உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இப்பேரணியில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் எம்.கோவிந்தராஜ், துணை இயக்குநர் (தொழு நோய்) மரு.ஜெயந்தினி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தென்காசி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் குத்துக்கல்வலசையில் மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் காமராஜர் சிலைக்கு மரியாதை



தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் 123வது பிறந்த நாளை முன்னிட்டு குத்துக்கல்வலசையில் அமைந்துள்ள காமராஜர் மு ழு திருவுருவச்சிலைக்கு தென்காசி கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் அழகுசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை தந்த மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலனுக்கு ஒன்றிய திமுக செயலாளர் அழகுசுந்தரம் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

இந்நிகழ்வில் தென்காசி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கலை கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் இலத்தூர் ஆறுமுகச்சாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, பேரூர் திமுக செயலாளர்கள் சுடலை, சங்கர் (எ) குட்டி, முத்தையா, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், இளைஞரணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் ரகுமான் சதாத், அயலகஅணி துணைஅமைப்பாளர் இராமராஜன், இளைஞரணி ஒன்றிய அமைப்பாளர் குமார், ஒன்றிய துணைச்செயலாளர் ஐடிஇ ஆனந்த், குற்றாலம் அறங்காவலர் குழு உறுப்பினர் சுந்தர்ராஜ், நகரவர்த்தகஅணிதுணை அமைப்பாளர் சபரி மெஸ் சங்கர், மகளிர் தொண்டர் அணி பொன்மாரி, பிஎல்ஏடு ராஜேந்திரன், செல்லத்துரை, சுப்பையா என்ற கண்ணுமுத்தையா, ஐடி விங்க் திருநாவுக்கரசு, மாரிச்சாமி, சங்கர், கனி, சேர்மராஜ், சுரேஷ், அருள், சின்னராஜ், சி.குமார், கன்னி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள்பலர்கலந்துகொண்டனர்.

# திருநெல்வேலி சந்திப்பில் தமிழக வெற்றிக்கழக கொள்கை தலைவர் பெருந்தலைவர் காமராஜருக்கு மரியாதை



நெல்லை, ஜூலை 16

தமிழக வெற்றிக் கழகம் தலைவர் தளபதி விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுச் செயலாளர் ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாவட்ட செயலாளர் தெய்வத்திரு சஜி அவர்களின் ஆசியுடன் மாவட்ட இணை செயலாளர் திரு எஸ் மரிய ஜான் அவர்களின் தலைமையில் மாவட்ட பொருளாளர் திரு பைசல் ரகுமான் அவர்களின் மேற்பார்வையில் தமிழக வெற்றிக்கழக கொள்கை தலைவர் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 15/7/25 செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் நெல்லை சந்திப்பில் உள்ள அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது நிகழ்ச்சியில் மாவட்ட கழகம், மாவட்ட சார்பு அணி, மாநகரம், ஒன்றியம், பகுதி, கிளை மற்றும் வார்டு நிர்வாகிகள் கழகத் தோழர்கள் தோழிகள் திரளானோர் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்

# தென்காசியில் எம்எல்ஏ பழனிநாடார் தலைமையில் காமராஜர் 123 வது பிறந்தநாள் விழா




தென்காசியில் அமைந்துள்ளகாந்திசிலைமுன்பு தென்காசி மாவட்ட மகிளா காங்கிரஸ் மற்றும் நகர காங்கிரஸ் சார்பில் முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 123 வது பிறந்தநாள் நிகழ்ச்சி தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பழனிநாடார் தலைமையில் நடைபெற்றது.

பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த தின விழாவை முன்னிட்டு தென்காசி காந்தி சிலை பகுதியில் பெருந்தலைவர் காமராஜர் மற்றும் மகாத்மா காந்தி படங்களுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.


அதனைத் தொடர்ந்து குத்துக்கல்வலசை, அய்யாபுரம், பகுதிகளில் காமராஜரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதன்பின் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் காங்கிரஸ் கொடி யேற்றி வைத்து பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு தென்காசி மாவட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரும், தென்காசி சட்டமன்ற உறுப்பினருமான எஸ் பழனி நாடார் தலைமை வகித்து அலங்கரிக்கப்பட்ட காமராஜரின் புகைப்படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து காங்கிரஸ் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு தென்காசி மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி பூமாதேவி, தென்காசி நகரகாங்கிரஸ் தலைவர் ஜி.மாடசாமி ஜோதிடர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் ஆயிரப்பேரி தி.உதய கிருஷ்ணன் மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஏஜிஎம் கணேசன், சந்தோஷ் ஜார்ஜ், மாவட்டத் துணைத்தலைவர்சண்முகவேல் வட்டாரத் தலைவர்கள் தென்காசி பெருமாள், செங்கோட்டை கதிரவன், கவுன்சிலர்கள் சுப்பிரமணியன் முகமது ரபிக், இளைஞர் காங்கிரஸ் பிரேம்குமார், நகர நிர்வாகிகள் ஏ.எல்.என். ஆறுமுகம், பீர்முகம்மது, தேவராஜன், சித்திக், நகர பொருளாளர் ஈஸ்வரன், கந்தையா, அமானுல்லா, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் தென் திருப்பதி எனும் திருவண்ணாமலை சீனிவாசப்பெருமாள் கோயில் கும்பாபிஷேக பெருவிழா



ஸ்ரீவில்லிபுத்தூர் ஜூலை 16

ஸ்ரீ வில்லிபுத்தூர் அருகே ஆண்டாள் கோயிலுடன் இணைந்த திருவண்ணாமலை சீனிவாசப்பெருமாள் கோயில் மலை மேல் உள்ளது.பக்தர்கள் இந்த தளத்தை தென்திருப்பதி என அழைப்பார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த திருவண்ணாமலை சீனிவாசப்பெருமாள் கோயில் கும்பாபிஷேக பெருவிழா கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

இந்நிலையில் தமிழக அரசு இந்த கோயிலில் கும்பாபிஷேகம் நடத்த திட்டமிட்டு திருப்பணிகளை சிறப்பாக நடைபெற்று முடிவடைந்து இதனைத் தொடர்ந்து நேற்று கும்பாபிஷேக திருவிழா காலை 5.45 மணிக்கு மேல் 6.25 க்குள் நடைபெற்றது. முன்னதாக கடந்த மூன்று நாட்களாக யாகசாலை அமைக்கப்பட்டு வைகானச ஆகமப்படி பூஜைகள் நடைபெற்றது

தொடர்ந்து நேற்று காலை மிதுன லக்னத்தில் சீனிவாசப்பெருமாள், பரிகார தெய்வங்கள் மற்றும் விமானத்திற்கு திருகுடமுழுக்கு என்னும் கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. அர்ச்சகர்கள் எல் எஸ் ராஜு என்று லக்ஷ்மணப்பட்டர் ஸ்ரீவாரி வி முத்துப்பட்டர் வி வாசுதேவப்பட்டர் சுரேஷ் சீனிவாச பட்டர் கிரி பட்டர் ஆகியோர் கும்பாபிஷேகத்தினை நடத்தி வைத்தனர். இதனைத் தொடர்ந்து சீனிவாசப் பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனம் மற்றும் ராஜ அலங்காரம் செய்யப்பட்டிருந்தது, கும்பாபிஷேகத்தை தொடர்ந்து திரண்டிருந்த பக்தர்களுக்கு புனித நீர் ட்ரோன் மூலம் தெளிக்கப்பட்டது.

கும்பாபிஷேக பெருவிழாவில் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் பி ஆர்.வெங்கட்ராம ராஜா அவரது மனைவி ராம்கோ நிறுவனங்களின் இயக்குனர்கள் ஸ்ரீ கண்டன் ராஜா ஸ்ரீமதி நளினா ராமலட்சுமி ஸ்ரீமதி சாரதா தீபா ஸ்ரீ ராம ராஜா ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் இ.எம். மான்ராஜ் அ.தி.மு.க. வடக்கு ஒன்றிய செயலாளர் குறிஞ்சி முருகன் கோயில் செயல் அலுவலர் செள.சக்கரையம்மாள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் பக்தர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

கும்பாபிஷேகம் முடிந்துபக்தர்கள் திரண்டு சென்று சீனிவாச பெருமாளை தரிசனம் செய்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் டிஎஸ்பி ராஜா தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது பக்தர்களின் வசதிக்காக குடிநீர், மருத்துவம், பேருந்து வசதி உள்ளிட்டவை சிறப்பாக செய்யப்பட்டிருந்தது இவ்விழா ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர். வெங்கட்ராமராஜா மற்றும் அறங்காவலர்கள் கோயில் செயல் அலுவலர் செள.சக்கரையம்மாள் திருக்கோவில் அலுவலர்களும் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

16.7.2025

# தேசிய அளவிலான மொய்த்தாய் என்ற விளையாட்டு போட்டியில் தமிழக அணி தங்கம், வெள்ளி பதக்கம் பெற்று சாதனை



ஈரோடு, ஜூலை 16

தேசிய அளவிலான மொய்த்தாய் என்ற விளையாட்டுபோட்டியில் தமிழக அணி தங்கம், வெள்ளி பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளது

தாய்லாந்து குத்து சண்டை போன்று மொய்த்தாய் என்ற விளையாட்டு போட்டிகள், மாநில அளவில் சென்னையிலும், தேசிய அளவில் சண்டிகார், ஜெய்பூரில் நடைபெற்றது. மாநில அளவிலான சென்னையில் நடைபெற்ற போட்டியில் ஈரோட்டில் இருந்து பல வீரர்கள் வீராங்கனைகள் கலந்து பெற்றார்கள். அதில் வீரர்கள் வேதா தங்கம், மக ஸ்ரீ தங்கம், சச்சின் வெள்ளி, வைபவ் வெள்ளி, பிரணவ் வெள்ளி, நளன் ராஜ் தங்கம், நிக்லியன் ராஜ் தங்கம் பதக்கங்களை வென்று ஈரோட்டிற்கு பெருமை சேர்த்தனர்.

தேசிய அளவில் சண்டிகரில் நடைபெற்ற போட்டியில் பி வேதா தங்கம், சாய் நிகிலேஷ் தங்கம், பிரணவ் வெண்கலம், நலன்ராஜ் தங்கம், நிக்லியன் ராஜ் தங்கம் பதக்கங்களை வென்று ஈரோட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தார்கள்.

தேசிய அளவிலான ஹரியானாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியிலும் பல்வேறு மாநிலங்களில் இருந்து வீரர்கள் வீராங்கனைகள் பங்கு பெற்றார்கள். இதில் மகஸ்ரீ தங்கம், சச்சின் தங்கம், சாய் நிகிலேஷ் வெள்ளி, நிக்லியன் ராஜ் தங்கம், நலன்ராஜ் வெள்ளி ஆகிய பதக்கங்களை வென்று ஈரோட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்தார்கள். இவர்கள் அனைவரும் ஈரோட்டில் அமைச்சர் முத்துச்சாமி சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார்கள்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கான முன்னேற்பாடு பணிகள்: மாவட்ட கலெக்டர் நேரில் ஆய்வு



விழுப்புரம், ஜூலை 16

விழுப்புரம் காவலர் சமுதாய கூடத்தில், விழுப்புரம் நகராட்சிக்குட் பட்ட 16 மற்றும் 17 வார்டுகளுக்கு நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கான முன் னேற்பாடு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ் மான் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் கடலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைப்பதை தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.

அதனடிப்படையில், விழுப்புரம் மாவட்டத்தில், முதற்கட்டமாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் தொடங்கி 14.08.2025 வரை நடைபெறவுள்ளது. இதில் நகர்ப்புற பகுதிகளில் 21 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 81 முகாம்களும் ஆக மொத்தம் 102 முகாம்கள் நடைபெறவுள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சேர்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில், விழுப்புரம் காவலர் சமுதாய கூடத்தில், விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட 16 மற்றும் 17 வார்டுகளுக்கு நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமிற்கான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது, 13 அரசுத்துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மேசைகள், இசேவை மற்றும் ஆதார் சேவைகளுக்கான அமைக்கப்பட்ட மேசைகள், பொதுமக்கள் எளிதில் துறைகளை அணுகிடும் விதமாக ஒவ்வொரு துறைக்கான பெயர் மற்றும் ஊழரவெநச எண் குறிப்பிடப்பட்டுள்ளது குறித்தும், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவறை வசதி (ஆண்ஃபெண்), மாற்றுத்திறனாளிகளுக் கான சாய்வு தள வசதி, வாகனங்கள் நிறுத்துவற்கான இட வசதி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல், விண்ணப்பங்கள் அளிக்க வரும் பொதுமக்கள் அமர்வதற்கான இருக்கை வசதிகள், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பங்கள் அளிக்க வரும் மகளிர்களுக்கு தனியாக இருக்கை வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், முகாமில் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்வதற்கு ஏதுவாக அதிவேக இணையதள வசதிகள் உள்ளிட்டவை ஏற்படுத்திட வேண்டும் என மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் (16.7.2025)

மேஷம்: செயல்களில் தாமதம், ஆனால் நம்பிக்கையை இழக்க வேண்டாம். மதியம் பின் சுபசெய்தி வரும்.

ரிஷபம்: பணவரவு சற்று அதிகமாகும். குடும்ப மகிழ்ச்சி. பழைய சந்தேகங்கள் தீரும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு சிறப்பாக இருக்கும்

மிதுனம்: பயணங்களில் லாபம், புதிய நண்பர்கள் உருவாகலாம். ஆபத்தான முடிவுகளை தவிர்க்கவும். பரிகாரம்: துர்கை வழிபாடு.

கடகம்: மனதில் குழப்பம், தொழிலில் மாற்றம் பற்றிய சிந்தனை. நெருங்கியவர்களிடம் ஆலோசனை பெறவும்.

சிம்மம்: அரசாங்க ஆதாயம் அல்லது அதிகாரிகளிடம்நல்லபரிமாற்றம். நிதி நிலை மேம்படும். பரிகாரம்: சூரிய நமஸ்காரம்.

கன்னி: தொழில் முன்னேற்றம், புதிய வாய்ப்புகள். கவனமாக செயல்பட வேண்டும். பரிகாரம்: துர்க்கை அபிஷேகம்.

துலாம்: குடும்பத்தில் அமைதி, நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். வழக்கில் வெற்றி. பரிகாரம்: நவகிரஹ வழிபாடு.

விருச்சிகம்: கடன் குறைவு, நண்பர்கள் ஆதரவு. மன நிம்மதி பிறக்கும். பரிகாரம்: அனுமன் வழிபாடு.

தனுசு: கல்வியில் வெற்றி, அரசியல் தொடர்புகள் மேம்படும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

மகரம்: குடும்பத்தில் குழப்பம், சின்ன சின்னசண்டைகளைதவிர்க்கவும். பொறுமை தேவை. பரிகாரம்: சனி பகவான் வழிபாடு.

கும்பம்: தொழிலில் புதுமை, மகிழ்ச்சி தரும் நிகழ்வுகள். அண்ணா–தங்கை உறவில் இணக்கம். பரிகாரம்: துர்வாசர் மந்திரம் ஜபம்.

மீனம்: பண வரவுக்கு வாய்ப்பு, ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி. பரிகாரம்: குருபகவான் அருளைப் பெற புளியோதரை நிவேதனம் செய்யவும்.

# திமுக இளைஞரணி சார்பில் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு சாதனை விளக்க பிரச்சார கூட்டம்



திட்டக்குடி, ஜூலை .16

கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றிய திமுக இளைஞர் அணி சார்பில் கலைஞரின் 102 வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெரு முனை பிரச்சார கூட்டம் நிராமணியில் ஒன்றிய செயலாளர் பாவாடை கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேஷ்குமார். விருத்தாசலம் தெற்கு ஒன்றிய செயலாளர் வேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்ட செயலாளரும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான சி.வெ.கணேசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக், இளம் பேச்சாளர் முகினா உள்ளிட்டோர் பங்கேற்று திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.


இக்கூட்டத்தில், நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன், துணை அமைப்பாளர்கள் நகர் பாபு, குணசேகரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் அண்ணாதுரை, மாரிமுத்தாள் குணா, அன்புக்குமரன். உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நிராமணி கிளை செயலாளர்கள் சண்முகம், மாயவேல் நன்றி கூறினர்.

# குன்னூர் அருகே மனைவியின் கையை கடித்து, கணவனின் மண்டையை உடைத்த போதை ஆசாமி கைது




குன்னூர் அருகே உள்ள கக்காச்சி எம்ஜிஆர் நகர் பகுதியை சேர்ந்தவர் ராஜா (வயது 48) கூலி வேலை செய்து வரும் இவர் அடிக்கடி மது போதையில் வீட்டில் தகராறு செய்து வருவதால் இவரது மனைவி பிரிந்து சென்று விட்டார். இந்நிலையில் நேற்றுபோதையில்இருந்த ராஜா அதே பகுதியை சேர்ந்த புஷ்பராஜ் என்பவர் மனைவி உமா பதியுடன் போதையில் தகராறு செய்துள்ளார். இதில் ஒரு கட்டத்தில் ராஜா இவருடைய கையைப் பிடித்து இழுத்து கழுத்து உள்ளார். உடனடியாக அருகே இருந்த உமா பதியின் கணவர் புஷ்பராஜ் அவரை தட்டி கேட்டு உள்ளார். அப்போது அருகே இருந்த உருட்டு கட்டையால் அவரை பலமாக தாக்கி உள்ளார். இதில் காயம் அடைந்த இருவரும் குன்னூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இது குறித்து கொலக்கம்பை போலீசார் வழக்குப் பதிவு செய்து ராஜாவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# கல்கி 2898 ஏடி, ஆர்.ஆர்.ஆரை விட 8 மடங்கு அதிகம்...ராமாயணம் படத்தின் பட்ஜெட் என்ன?




நிதேஷ் திவாரியின் 'ராமாயணம்' இந்தியாவின் மிகப்பெரிய பட்ஜெட் படம் என்ற சாதனையை பெற்றிருக்கிறது. அதன்படி, இரண்டு பாகங்களையும் சேர்த்து ரூ. 4,000 கோடி பட்ஜெட்டில் தயாராகி வருகிறது. இது ''கல்கி 2898 ஏடி'', '' ஆர்.ஆர்.ஆரை'' விட 8 மடங்கு அதிகம் ஆகும்.

ரன்பீர்கபூர், யாஷ் மற்றும் சாய் பல்லவி நடிக்கும் இந்தப் படம், உலகத் தரம் வாய்ந்த விஎப்எக்ஸ், ஏஐ டப்பிங் மற்றும் ஹான்ஸ் ஜிம்மர் மற்றும் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோரின் இசையுடன் பிரமாண்டமாக உருவாகி வருகிறது.

முன்னதாக, இப்படத்தின் பட்ஜெட் சுமார் ரூ. 1,600 கோடி இருக்கும் என்று ஊகிக்கப்பட்டநிலையில், தற்போது படத்திற்கு நெருக்கமான ஒருவர் செலவு ரூ. 4,000 கோடியை நெருங்கி உள்ளதாகவும், இது இந்தியாவில் இதுவரை தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய பட்ஜெட் படங்களில் ஒன்றாக இருப்பதாகவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

சமீபத்தில் மோஷன்போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டனர். இதில் அனிமேஷன்காட்சிகள் அதிகமாக இருந்திருந்தாலும், ஆஸ்கர் விருது பெற்ற ஹான்ஸ் ஜிம்மர் மற்றும் ஏ.ஆர்.ரகுமானின் பின்னணி இசை எதிர்பார்ப்புகளை அதிகரித்தது.

'ராமாயணம்' படத்தில் ராமராக ரன்பீர் கபூர், சீதையாக சாய் பல்லவி, ராவணனாக யாஷ் ஆகியோர் நடிக்கின்றனர். மேலும், சன்னி தியோல், விக்ராந்த் மாஸ்ஸி, ரவி துபே, லாரா தத்தா, இந்திரா கிருஷ்ணன், விவேக் ஓபராய் மற்றும் அருண் கோவில் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

இப்படத்தின் முதல் பாகத்தை அடுத்தாண்டு தீபாவளிக்கு வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து இரண்டாம் பாகம் 2027ல் தீபாவளிக்கு வெளியாகிறது.

# ''ஹாரி பாட்டர்'' வெப் தொடரின் படப்பிடிப்பு தொடக்கம்...பர்ஸ்ட் லுக் வெளியீடு



ஜே.கே.ரவுலிங் எழுதிய 'ஹாரி பாட்டர்' நாவலை அடிப்படையாக கொண்டு வார்னர் புரோஸ் நிறுவனம் 8 படங்களை தயாரித்து வெளியிட்டது. இந்த படங்களில் டேனியல் ராட்க்ளிப் , ரூபர்ட் கிரின்ட் மற்றும் எம்மா வாட்சன் ஆகியோர் மூன்று முன்னணி கதாபாத்திரங்களில் நடித்தனர்.

8 பாகங்களாக வெளியான 'ஹாரி பாட்டர்' படங்கள் இப்போது வெப் சீரிஸாக உருவாகிறது. எச்பிஓ தளம் (HBO) தயாரிக்கும் இந்த சீரிஸிற்கான படப்பிடிப்பு தற்போது தொடங்கி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனுடன், ஹாரி பாட்டராக நடிக்கும் டொமினிக் மெக்லக்லினின் பர்ஸ்ட் லுக்கும் வெளியாகி உள்ளது.

இந்த வெப் சீரிஸில் முன்னணி கதாபாத்திரங்களான ஹாரி பாட்டராக டொமினிக் மெக்லக்லின், ஹெர்மியோன் கிரேஞ்சராக அரபெல்லா ஸ்டாண்டன் மற்றும் ரான் வீஸ்லியாக அலஸ்டர் ஸ்டவுட் ஆகியோர் நடிக்கின்றனர்.

30 ஆயிரம் பேருக்கும் அதிகமானோரை ஆடிஷன் செய்த பிறகு, இந்த 3 பேரும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டனர். இந்தத் தொடரை 2027ம் ஆண்டில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

# ஹாலிவுட்டில் அறிமுகமாகும் ''துப்பாக்கி'' பட வில்லன்

தமிழில் துப்பாக்கி, அஞ்சான் உள்ளிட்ட படங்களில் நடித்து புகழ் பெற்ற பாலிவுட் நடிகர் வித்யுத் ஜம்வால், ''ஸ்ட்ரீட் பைட்டர்'' படத்தில் தல்சிமாக நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. இது உண்மையாகும் பட்சத்தில் அவர் ஹாலிவுட்டில் அறிமுகமாகும் படமாக இது இருக்கும்.

இந்த படம் கேப்காமின் பிரபலமான வீடியோ கேம் தொடரை அடிப்படையாகக் கொண்டது. இந்த படத்தில் ரியூவாக ஆண்ட்ரூ கோஜி, கென்னாக நோவா சென்டினியோ, எம் பைசனாக டேவிட் டஸ்ட்மால்ச்சியன், கெய்லாக கோடி ரோட்ஸ், பிளாங்காவாக ஜேசன் மோமோவா மற்றும் பால்ராக்காக கர்டிஸ் ஜாக்சன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேலும், வேகாவாக ஆர்வில் பெக், டான் ஹிபிகியாக ஆண்ட்ரூ ஷூல்ஸ், அகுமாவாக ரோமன் ரெய்ன்ஸ் மற்றும் ஈ ஹோண்டாவாக ஹிருக்கி கோட்டோ ஆகியோரும் உள்ளனர். இந்த படத்தை கிட்டாவோ சகுராய் இயக்குகிறார்.

# ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் வெற்றி; டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் ஏற்பட்ட மாற்றம்



4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர்களில் தற்போது அணிகள் டெஸ்ட் கிரிக்கெட் ஆடி வருகிறது. அந்த வகையில் 4வது உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட ஆஸ்திரேலியா வெஸ்ட் இண்டீஸ், இந்தியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வது டெஸ்ட் போட்டிகள் முடிவுக்கு வந்துள்ளன.

இந்த போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸை வீழ்த்தி ஆஸ்திரேலியாவும், இந்தியாவை வீழ்த்தி இங்கிலாந்தும் வெற்றி பெற்றுள்ளன. இந்த இரு அணிகள் வெற்றி பெற்றதை அடுத்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ளது.

அந்த பட்டியலில் ஆஸ்திரேலியா (100 சதவீதம்) முதல் இடத்தில் உள்ளது. இங்கிலாந்து (66.67சதவீதம்) 2ம் இடத்திலும், இலங்கை (66.67 சதவீதம்) அணி 3ம் இடத்திலும், இந்தியா (33.33 சதவீதம்) 4வது இடத்திலும், வங்காளதேசம் (16.67 சதவீதம்) 5வது இடத்திலும் உள்ளன. தொடர்ந்து 6 வது இடத்தில் முறையே வெஸ்ட் இண்டீஸ், நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா அணிகள் (சதவீதம் இன்றி) உள்ளன.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்; இங்கிலாந்து முன்னணி வீரர் விலகல்



இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளின் முடிவில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3வது டெஸ்ட் போட்டி கடந்த 10ம் தேதி லண்டன் லார்ட்சில் தொடங்கியது. இதில் முதல் இன்னிங்சில் இரு அணிகளும் தலா 387 ரன்கள் எடுத்து ஆல் அவுட் ஆகின. பின்னர் 2வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி 62.1 ஓவர்களில் 192 ரன்னில் சுருண்டது. அதிகபட்சமாக ஜோ ரூட் 40 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் வாஷிங்டன் சுந்தர் 4 விக்கெட்டும், பும்ரா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதன் மூலம் இந்தியாவுக்கு 193 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 74.5 ஓவர்களில் 170 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் இங்கிலாந்து 22 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனி ஆளாக போராடிய ஜடேஜா 61 ரன்களுடன் இறுதிவரை களத்தில் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஆர்ச்சர், ஸ்டோக்ஸ் தலா 3 விக்கெட்டுகளும், பிரைடன் கார்ஸ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து 21 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி 23ம் தேதி மான்செஸ்டரில் நடைபெற உள்ளது. இந்நிலையில், இந்தியாவுக்கு எதிரான எஞ்சிய டெஸ்ட் தொடரில் இருந்து இங்கிலாந்து முன்னணி வீரரான ஷோயப் பஷீர் விலகி உள்ளார். லார்ட்ஸ் டெஸ்டின் போது பஷீரின் இடது கைவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் அவர் அதற்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் இந்த தொடரில் இருந்து விலகி உள்ளதாக கூறப்படுகிறது. அவருக்கு பதிலாக மாற்று வீரர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

# அகில இந்திய ஆக்கி: ரெயில்வே அணி 2வது வெற்றி

எம்.சி.சி. முருகப்பா தங்க கோப்பைக்கான 96வது அகில இந்திய ஆக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 10 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன 5வது நாளான நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியன் இந்தியன் ரெயில்வே அணி 42 என்ற கோல் கணக்கில் மராட்டியத்தை வீழ்த்தி தொடர்ச்சியாக 2வது வெற்றியை பெற்றது. ரெயில்வே அணியில் குர்ஜகிப்ஜித் சிங், தர்ஷன் கவ்கர், ஷிஷி கவுடா, சண்முகமும், மராட்டிய அணியில் கணேஷ் பட்டீல், ரோஹன் பட்டீலும் கோலடித்தனர்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய ராணுவம் 10 என்ற கோல் கணக்கில் போபால் என்.சி.ஓ.இ. அணியை வீழ்த்தி முதலாவது வெற்றியை பதிவு செய்தது. ராணுவ வீரர் அக்ஷய் துபே முதல் நிமிடத்தில் அடித்த கோல் வெற்றியை நிர்ணயிப்பதாக அமைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் இந்தியன் ஆயில் மலேசியா ஜூனியர் (மாலை 4.15 மணி), இந்தியன் ரெயில்வேதமிழ்நாடு (மாலை 6 மணி) அணிகள் மோதுகின்றன.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.